# அறிவிக்கை

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிக்கை மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிக்கை

| வ.எண் | அறிவிக்கை வருடம் | அறிவிக்கை | தற்போதைய நிலவரம் |
|---|---|---|---|
| **மாண்புமிகு முதலமைச்சர் அறிவிக்கை** | | | |
| **1.** | **2015 – 2016** | மாணவ மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் தரமானதாகவும், குறித்த காலத்திலும் வழங்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு அனைத்து பொருள்களையும் கொள்முதல் செய்து விநியோகிக்கம் பணிக்கு தமிழ்நாடு பாடநூல் கழகம் கொள்முதல் ஒருங்கினைப்பு மையமாக செயல்பட ஏதுவாக 2013ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் பாதுகாப்பாக வைக்கப்படும் பொருட்டு சென்னை, காஞ்சிபுரம், வேலூர், பர்கூர், தஞ்சாவூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் கிடங்குகள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனபடுத்தி கணினி மயமாக்கப்படும். | <u>**அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**</u><br>➢ முதற்கட்டமாக சென்னை கிடங்கினை நவீனபடுத்தி கணினி மயமாக்கி தானியங்கி இருப்பு மற்றும் வழங்கும் கருவி **(Automated Storage and Retrieval Systems - ASRS)** அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.<br>➢ தமிழ்நாடு செய்திதாள் மற்றும் காகித நிறுவனம் இத்திட்ட மேலாண்டை ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>➢ இப்பணிக்காக தமிழ்நாடு செய்திதாள் மற்றும் காகித நிறுவனத்துடன் புரிந்துணர்வு (Memorandum of Understanding) ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.<br>➢ இப்பணியினை திறம்பட மேற்கொண்டு கண்காணிக்கும் பொருட்டு 4 பொறியாளர்கள் தேவையில் தற்பொழுது 3 பொறியாளர்கள் அயற்பணியில் இக்கழகத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். – **ASRS (Automated Storage and Retrieval Systems)** முறையில் பணி மேற்கொள்ளும் பிற நிறுவனங்களில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இக்கழக பணிக்கு உகந்தவாறு சரியான **ASRS (Automated Storage and Retrieval Systems)** அமைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

| | | | |
|---|---|---|---|
| 2. | 2016 - 2017 | மலைப் பிரதேசங்களில் வாழும் மாணவர்கள் மழை மற்றும் குளிர் காலத்தில் உடல் நலம் பாதிப்பு இன்றி பள்ளிக்கு சென்று வர ஏதுவாக 1 முதல் 8 ஆம் வகுப்பு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கம்பளிச் சட்டை கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. இம்மாணாக்கர்கள் மழைக் காலங்களிலும் எவ்வித சிரமுமின்றி பள்ளிக்கு வருகை புரிய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் கூடுதலாக மழைக்கோட்டு (Rain Coat), பூட்ஸ் (Boots), மற்றும் காலுறைகள் (Socks), வழங்கப்படும். இதற்கு 8 கோடி ரூபாய் செலவு ஏற்படும். | <u>**அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**</u><br>➢ மழைக்கோட்டு ( Rain Coat) மற்றும் காலுறைகள் (Socks) கொள்முதலுக்கான டென்டர் படிவம் ஆளுநர் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. செய்திதாள்களில் விளம்பர அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.<br>➢ மாணவர்களுக்கு பூட்ஸ் (Boots) மாதிரிகளை காண்பித்து பூட்ஸ் வடிடிமைப்பு குறித்து மாணவர்களிடம் கருத்து கோருவதற்காக பூட்ஸ் மாதிரிகள் 13 அளவுகளில் அளவுக்கு 5 செட் வீதம் வெளிச் சந்தையில் பெறப்பட்டு திண்டுக்கல், வேலூர், நீலகிரி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களுக்கு 08.05.2017ல் அனுப்பப்பட்டுள்ளது.<br>➢ மழைக்கோட்டு (Rain Coat) பூட்ஸ் (Boots) மற்றும் காலுறைகள் (Socks) கொள்முதலுக்காக இக்கழ நிதியிலிருந்து ரூ.8 கோடி செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது. |
| 3. | 2016 - 2017 | மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வருகைப் பதிவேடு கையாள்வதில் தற்போது உள்ள கையெழுத்திடும் நடைமுறையை மாற்றி புதிய தொழில்நுட்ப உத்தியின் அடிப்படையில் தொட்டுணர் **Bio - Metric** கருவிகளைக் கொண்டு வருகைப் பதிவுமுறை முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படும். இதற்கென 45 கோடியே 57 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும். | <u>**அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது**</u><br>➢ தொட்டுணர் (Bio-Metric) கருவிகள் அமைக்கும் பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது.<br>➢ முன்னோடியாக ரூ.5 இலட்சம் செலவில் தொட்டுணர் கருவிகளை பெரம்பலூர் மாவட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிக்கை | | | |
|---|---|---|---|
| **1.** | **2016 – 2017** | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி மாணவர்களுக்கு விலையில்லாக் கல்வி உபகரணப் பொருட்கள் ஆண்டுதோறும் முறையாக விநியோகிக்க, இந்த விலையில்லா கல்வி உபகரணப் பொருட்கள் விநியோக நிலையினைக் கண்காணிக்க ஏதுவாக, ஆய்வு அலுவலர்களுக்கு கணினி மற்றும் சார்ந்த உபகரணங்கள் 4 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். | **<u>அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது</u>**<br>➢ ஆய்வு அலுவலர்களுக்கு 480 கணினிகள் **ELCOT** நிறுவனத்தின் மூலமாக முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.<br>➢ இதற்காக ரூ.4.36 கோடி இக்கழக நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. |
| **2.** | **2016 - 2017** | கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் உள்ள குழந்தைகளுக்கு தரமான கல்வியினை வழங்குவதற்காக 44 மாதிரிப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளி மாணவர்களின் கற்றல் திறனை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, கணினி மற்றும் சார்ந்த உபகரணங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 4 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். | **<u>அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது</u>**<br>➢ 44 மாதிரி பள்ளிகளுக்கு **ELCOT** நிறுவனத்தின் மூலம் கணினிகள் வழங்கப்பட்டுள்ளது.<br>➢ இதற்காக ரூ.2.84 கோடி இக்கழக நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. |

<table>
<tr>
<td>3.</td>
<td>2016 - 2017</td>
<td>தமிழ்நாடு பாடநூல் நிறுவனத்தினால் பல்வேறு தலைப்புகளில் சுமார் 1000 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல்கள், தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் இணைந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 5 கோடி ரூபாய் செலவில் மின்மியமாக்கி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.</td>
<td><u>அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது</u>
<table>
<tr><td>தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்பட்ட உயர்க்கல்வி நூல்களின் மொத்த எண்ணிக்கை</td><td>1100</td></tr>
<tr><td>மின்மியமாக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை</td><td>1016</td></tr>
<tr><td>மின்மியமாக்கச் செய்யப்பட வேண்டிய மீதமுள்ள பாடநூல்களின் எண்ணிக்கை (தேடப்படுகின்றன)</td><td>84</td></tr>
<tr><td>மின்மியமாக்கம் செய்யப்பட்ட (1016 ) நூல்களின் மொத்தப்பக்கங்கள்</td><td>3,66,233</td></tr>
<tr><td>TVA மற்றும் நூலக துறை மூலம் catalogue செய்யப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை</td><td>874</td></tr>
<tr><td>TVA மற்றும் பள்ளிக் கல்வி துறை ஆசிரியர்கள் உதவியுடன் (summary writing, keywords, side heading) செய்யப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை</td><td>890</td></tr>
<tr><td>மின்மியமாக்கப்பட்ட நூல்களுக்கு தரச்சான்று தரவேண்டிய நிறுவனம்</td><td>TVA</td></tr>
<tr><td>முழுப்பணியும் முடிவடைய எதிர்பார்க்கும் நாள்</td><td>30.05.2017</td></tr>
</table>
</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| **4.** | **2016 – 2017** | மாவட்ட மைய நூலக வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க போட்டித் தேர்வு எழுதுபவர்களின் வசதிக்காக நடப்பு ஆண்டு முதல் 6 முதல் 12ஆம் வகுப்புவரை உள்ள ஆங்கில வழி மற்றும் தமிழ்வழி பாடநூல்கள் முறையே இரண்டு தொகுப்புகள், 32 மாவட்ட மைய நூலகங்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி 9 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். | **<u>அறிவிக்கை தொடர்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது</u>**<br>➢ 32 மாவட்ட மைய நூலகங்களுக்கும் நூல்கள் வழங்கி பணி முடிக்கப்பட்டது.<br>➢ இதற்காக ரூ.9 இலட்சம் இக்கழக நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது. |
| **5.** | **2016 – 2017** | “ஆண்டு முழுவதும் பள்ளிக்கு விடுப்பு எடுக்காமல் தொடர்ந்து வரும் மாணவர்களையும் மற்றும் ஆசிரியர்களையும் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கப்படும்.இதற்கென ரூபாய் ஐந்து இலட்சம் செலவிடப்படும்.”<br>ஆரசாணை நிலை எண்188, பள்ளிக்கல்வி (ஆ.தே.வா) துறை நாள் 26.10.2016. | ➢ கேட்புத் துறையின் கோரிக்கை பெறப்பட்ட பின்னர் வழங்கப்படும். |